வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் C.C. No. 33/2022

வழக்கு சாட்சி – PW – 4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: மாரியம்மாள் | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 21.05.2025.

(எதிரி ஆஜர் )

**முதன்மை விசாரணை** (நேரம் : காலை 11.35 மணி)

நான் தேவிபட்டினம் வடக்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். பெட்டிக்கடை வைத்து பிழைப்பு நடத்தி வருகிறேன். சாட்சி 13 ஆறுமுகம் என் கணவர். விபத்தில் இறந்துபோன தனிக்கொடியை எனக்கு தெரியாது. சுமார் 4,5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் போலீசார் வந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். போட்டேன். எதற்காக அந்த கையெழுத்தை போட்டேன் என்றால் ஒன்றுமில்லை ஒரு கையெழுத்து போடுங்கள் என்று சொன்னதால் போட்டுக் கொடுத்தேன். எனக்கு படிக்க தெரியாது. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் எழுதி இருந்ததா இல்லையா என்று ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கோரியதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை** :

போலீசார் விசாரணையில் கடந்த 14.02.2020ம் தேதி மாலை 5.45 மணியளவில்நானும் எனது கணவர் ஆறுமுகமும் தேவிபட்டினம் இ.சி.ஆர் ரோட்டில் தென்னை விவசாய பண்ணை எதிரே நாங்கள் நடத்தி வரும் கடையில் இருந்தபோது தேவிபட்டினம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார் என்றும் அதற்கு சாட்சியாக நானும், என் கணவரும் கையெழுத்து செய்தோம் என்றும் தற்போது தனக்கு எதுவும் தெரியாது என எதிரியை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/- சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.